**ஏப்ரல் – 12**

# TNPSC துளிகள்

- உலகின் மிக உயரமான இரயில்வே மேம்பாலமான செனாப் பாலத்தின் வளைவுப் பகுதியின் கட்டுமானத்தை 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 அன்று வடக்கு இரயில்வே நிர்வாகம் நிறைவு செய்தது.
    - 1.3 கிலோ மீட்டர் நீளமான இந்தப் பாலம் ஜம்மு & காஷ்மீரில் உள்ள செனாப் ஆற்றின் படுகையிலிருந்து 359 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- அபுதாபியில் (ஐக்கிய அரபு அமீரகம்) அமைக்கப் பட்டுள்ள பாராக் அணுசக்தி நிலையம் தான் அரபு நாடுகளின் வரலாற்றில் முதல் அணுசக்தி நிலையம் ஆகும்.
    - இந்த நிலையம் சமீபத்தில் தான் வணிகரீதியாகச் செயல்பட தொடங்கியது.

# தமிழ்நாடு செய்திகள்

## மாரப்ப கவுண்டர்

- மாரப்ப கவுண்டர் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கருப்பராயன்பாளையத்தில் 1916 ஆம் ஆண்டு பிறந்தார்.
- இவர் 1952 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களித்து வருபவராவார்.
- தமிழ்நாடு 1952 ஆம் ஆண்டில் மதராஸ் மாநிலமாக இருந்த போது அதன் முதல் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தது.
- இந்தியத் தேசியக் காங்கிரஸ் அத்தேர்தலில் வெற்றி பெற்றது.
- அதன் ஆட்சிக் காலத்தில் C. இராஜகோபாலச்சாரி (1952-1954) மற்றும் K. காமராஜ் (1954 – 1957) ஆகியோர் மாநில முதல்வர்களாக பணியாற்றினர்.



# தேசியச் செய்திகள்

## SUPACE – உச்சநீதிமன்றம்

- இந்திய உச்சநீதிமன்றம் “SUPACE” எனப்படும் (Supreme Court Portal for Assistance in Courts Efficiency) நீதிமன்றங்கள் திறன்பட செயல்பட உதவுவதற்கான உச்சநீதிமன்ற

இணையதளம்) செயற்கை நுண்ணறிவு (AI) தளம் ஒன்றினைத் தொடங்கியுள்ளது.

- இத்தளத்தின் மூலம் வழக்குகள் பதிவு செய்யப்படும் நேரங்களில் பெறப்படும் அதிகளவிலான தரவுகளை கையாளுவதற்கான இயந்திர ரீதியிலான கற்றலை மேம்படுத்த உச்சநீதிமன்றம் எண்ணியுள்ளது.

***செயற்கை நுண்ணறிவுக் குழு***

- நீதிபதி L. நாகேஷ்வர ராவ், உச்சநீதிமன்றத்தின் செயற்கை நுண்ணறிவுக் குழுவின் தலைவராவார்.
- இந்தியத் தலைமை நீதிபதி (CJI) S.A. பாப்டே அவர்கள், செயற்கை நுண்ணறிவுக் குழுவின் முதல் தலைவராவார்.
- S.A. பாப்டே 2019 ஆம் ஆண்டில் இந்தியத் தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றார்.

## ஒடிசா இதிகாசத்தின் இந்தி மொழிபெயர்ப்பு

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் சமீபத்தில் "ஒடிசா இதிகாசத்தின்" இந்தி மொழிப் பெயர்ப்பினை வெளியிட்டார்.
- இப்புத்தகம் இதுவரையில் ஒடியா மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மட்டுமே வெளியானது.
- சங்கர்லால் புரோகித் இப்புத்தகத்தை இந்தியில் மொழிப்பெயர்த்துள்ளார்.

***ஒடிசா இதிகாசம்***

- இப்புத்தகம் உத்கல் கேசரி டாக்டர். ஹரேகிருஷ்ண மகாதேபினால் எழுதப்பட்டது.
- அவர் இப்புத்தகத்தை அகமத்நகர் கோட்டைச் சிறையில் சிறைப்பட்டிருந்த போது எழுதினார்.
- இவர் இங்கு 1942 மற்றும் 1945 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட இரண்டாண்டு காலங்களுக்கு சிறை வைக்கப் பட்டிருந்தார்.
- ஹரே கிருஷ்ண மகாதேப் ஒடிசாவின் முதல் முதலமைச்சர் ஆவார்.
- இவர் உத்கல் கேசரி என்று பிரபலமாக அழைக்கப்பட்டார்.

## SARTHAQ

- மத்தியக் கல்வி அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிசாங் அவர்கள், பள்ளிக் கல்விக்கான தேசிய கல்விக் கொள்கையை அமலாக்குவதற்கான "தரமான கல்வி மூலம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் முழுமையான மேம்பாடு" எனப்படும் (SARTHAQ – 'Students and Teachers' Holistic Advancement through Quality Education) திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டம் 2020 ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கையின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைய உதவும்.
- SARTHAQ திட்டம் கல்வி அமைச்சகத்தின் பள்ளிக் கல்வி மற்றும் கல்வியறிவு துறையினால் உருவாக்கப்பட்டது.
- இத்திட்டம் இந்திய சுதந்திர தினத்தின் 75வது ஆண்டுக் கொண்டாட்டமான 'அம்ரித் மகோத்சவ்' என்ற நிகழ்வின் ஒரு அங்கமாக வெளியிடப்பட்டது.
- இத்திட்டம் 2020 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையின் செயல்திட்டமாகும். மேலும் இது அடுத்த 10 ஆண்டுகளுக்கான அமலாக்கத்தினை செயல்படுத்தச் செய்வதற்கான ஒரு திட்டமாகும்.

- மேலும் ரமேஷ் பொக்ரியால் புதுதில்லியில் நடைபெற்ற 2020 ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கை மீதான அமலாக்கம் பற்றிய ஒரு உயர்நிலைக் குழுவிற்கும் தலைமை தாங்கினார்.

# பொருளாதாரச் செய்திகள்

## RBI வங்கியின் சமீபத்திய அறிவிப்புகள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) பண வழங்கீட்டு அமைப்புகளை இயக்குபவர்களை RTGS மற்றும் NEFT போன்ற மையப்படுத்தப்பட்ட பணவழங்கீட்டு முறைகளின் (Centralised Payment Systems – CPS) நேரடி உறுப்பினராவதற்கு அனுமதி வழங்க முடிவு செய்துள்ளது.
- ஆன்லைன் பணவழங்கீட்டு முறைகளில் இது ஒரு முக்கியமான செயல்பாடாகும்.
- கடந்த சில ஆண்டுகளாக பண வழங்கீட்டு முறையில் (prepaid) பணவழங்கீட்டு கருவிகள் (PPI) வழங்குவோர், அட்டை வழங்கும் அமைப்புகள், ATM இயந்திரங்கள் இயக்கும் வங்கி சாரா அமைப்புகள் (WLA), TReDS தளம் போன்ற வங்கி சாரா நிறுவனங்களின் அளவும் முக்கியத்துவமும் அதிகரித்துள்ளதாக RBI குறிப்பிட்டுள்ளது.

## நிதி உள்ளடக்க குறியீடு

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆண்டுதோறும் ஜூலை மாதத்தில் நிதி உள்ளடக்கக் குறியீட்டினை வெளியிட உள்ளதாக அறிவித்துள்ளது.
- இது மார்ச் மாதம் முடிவடைந்த கடந்த நிதி ஆண்டிற்கான குறியீடாகும்.
- நாட்டில் நிதி உள்ளடக்கத்தின் பரவலைக் கணக்கிடுவதற்காக பல பரிமாணங்களின் அடிப்படையில் ஒரு நிதி உள்ளடக்கக் குறியீட்டைத் தயாரித்து வெளியிட உள்ளதாக RBI கூறியுள்ளது.

## வழிவகைக்கான முன்பண வரம்புகள் உயர்வு – RBI

- ஸ்ரீ சுதீர் ஸ்ரீவஸ்தவா தலைமையிலான குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மாநில அரசுகள்/ஒன்றியப் பிரதேச அரசுகளின் வழிவகைக்கான முன்பண வரம்பினை ரூ.32,225 கோடியிலிருந்து (2016 ஆம் ஆண்டின் பிப்ரவரி மாதத்தில் நிர்ணயிக்கப் பட்டது) ரூ.47,010 கோடியாக RBI உயர்த்தியுள்ளது. இது சுமார் 46% உயர்வாகும்.
- உயர்த்தப்பட்ட இடைக்கால வழிவகைக்கான முன்பண வரம்பான (WMA) ரூ.51,560 கோடியினை மேலும் ஆறு மாதங்களுக்கு (அதாவது 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் 1, முதல் செப்டம்பர் 30 வரை) RBI நீட்டித்துள்ளது.

## பெருந்தொற்றினை எதிர்கொண்ட வெற்றி நிறுவனங்கள் மீதான ஒற்றுமை வரி

- பெருந்தொற்றினை எதிர்கொண்ட வெற்றி நிறுவனங்கள் மீதான ஒற்றுமை வரியினை சர்வதேச நாணய நிதியம் (IMF) சமீபத்தில் அறிவித்தது.
- அதாவது, கோவிட்–19 பெருந்தொற்றினால் ஏற்பட்ட நெருக்கடி காலங்களில் வளம் பெற்ற நிறுவனங்கள் அக்காலகட்டத்தில் கடுமையாக பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு இணையாக இருக்கும் வகையில் கூடுதல் வரியை செலுத்த வேண்டும்.

- இது ஒரு தற்காலிக வரி ஆகும்.
- இது சமீபத்திய சுகாதார நெருக்கடியின் போது அதிகரித்த சமூக சமத்துவமின்மையைக் குறைப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஒற்றுமை வரி (Solidarity tax) 1991 ஆம் ஆண்டில் மேற்கு மற்றும் கிழக்கு ஜெர்மனி ஆகியவை ஒன்றிணைந்த பிறகு அறிமுகப்படுத்தப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மூன்று பட்டைகள் உடைய கூம்பலகன் குருவி (RoseFinch)

- பம்பாய் தேசிய இயற்கை வரலாற்றுச் சமூக அமைப்பின் அறிவியலாளர்கள் ஒரு புதிய பறவை இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- அது மூன்று பட்டைகளுடைய கூம்பலகன் குருவி (Three banded RoseFinch) என அடையாளம் காணப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய பறவை இனம் அருணாச்சலப் பிரதேசத்தின் உயர்நிலை ஊசியிலைக் காடுகள் பற்றிய ஆராய்ச்சியின் போது கண்டறியப்பட்டது.
- இப்பறவையானது கூம்பலகன் வகை பறவை இனத்தைச் சார்ந்தது.
- இந்தப் பறவைகள் ஆஸ்திரேலியா மற்றும் துருவப் பகுதிகள் தவிர உலகின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகிறது.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சந்திரா நாயுடு காலமானார்

- இந்தியாவின் முதல் பெண் கிரிக்கெட் வர்ணனையாளர் (Commentator) சந்திரா நாயுடு காலமானார்.
- இவர் நாட்டின் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் அணித்தலைவர் C.K. நாயுடுவின் புதல்வியாவார்.
- இவர் 1977 ஆம் ஆண்டில் இந்தூரில் நேஷனல் சாம்பியன்ஸ் பாம்பே (தற்போது மும்பை) மற்றும் MCC ஆகிய அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியின் போது

அவருடைய முதல் வர்ணனையை (உரையை) ஆற்றினார்.


- இவர் "C.K. Nayudu : A Daughter Remebers on her late Father" என்ற தலைப்பிலான ஒரு புத்தகத்தையும் எழுதியுள்ளார்.

## தேவி சங்கர் அவஸ்தி விருது 2020

- புகழ்பெற்ற தேவிசங்கர் அவஸ்தி விருது இந்திய உரைநடையாளர், பத்திரிக்கையாளர் மற்றும் விமர்சகரான அசுத்தோஷ் பரத்வாஜூக்கு வழங்கப் பட்டு உள்ளது.
- இவ்விருது அவருடைய "பித்ர – வத்" எனும் படைப்பிற்காக வழங்கப்பட்டுள்ளது.
- அசோக் வாஜ்பாய், நந்த்கிஷோர் ஆச்சார்யா மற்றும் இராஜேந்திர குமார் உள்ளிட்ட தேர்வுக் குழு இவரை தேர்ந்தெடுத்தது.
- இந்தப் புத்தகம் ஆங்கில மொழியில் "The Death Trap" எனும் பெயரில் வெளியிடப் பட்டு உள்ளது.

# முக்கிய தினங்கள்

## CRPC வீரர்கள் தினம் – ஏப்ரல் 09




- மத்திய ரிசர்வ் காவல் படை (CRPF) வீரர்கள் தினம் அப்படையின் வீரர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் கொண்டாடப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டு 56வது CRPF வீரர்கள் தினமாகும்.
- 1965 ஆம் ஆண்டில் இதே நாளில்தான் குஜராத்தின் ரான் ஆப் கட்ச் பகுதியில் அமைந்த சர்தா சாவடியில் அத்துமீறி நுழைந்த பாகிஸ்தானிய ராணுவத்தினைத் தோற்கடித்து, CRPF அமைப்பின் ஒரு சிறிய படை வரலாறு படைத்தது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★